S. S. Uthayakumar
Dept of Economics

SOUTH EASTERN UNIVERSITY OF
SRI LANKA

# Proceedings of the
# Third International Symposium
# 2013

**Vol. I**

**PUBLISHED BY**
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
UNIVERSITY PARK
OLUVIL. 32360
SRI LANKA

**South Eastern University of Sri Lanka (SEUSL)**
University Park,
Oluvil, 32360.
Sri Lanka.
Phone: +94672255062/ 63/ 64
Fax: +94672255169
www.seu.ac.lk

**ISBN: 978-955-627-042-6**

**Copyright:**
© 2013 South Eastern University of Sri Lanka

**Disclaimer:**
*The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the SEUSL. The views expressed remain the responsibility of the named authors and do not necessarily reflect those of the SEUSL.*

**Compiled by:**
Dr. N.W.B. Balasooriya
Dr. M.I.M. Hilal

**Editorial Board:**
Dr. N.W.B. Balasooriya, Chief Editor
Dr. M.I.M. Hilal, Co-Editor
Mr. S. Sabraz Nawas

06th July 2013
***Printed By:***
Print and Print Graphic (Pvt) Ltd. Colombo-10

S.S. Uthayakumar(1) and P. Sivatharshan(2)

# உள்நாட்டுப்போர் விட்டுச்சென்ற சிறுவர் வறுமையும் அதன் சமூகபொருளாதார விளைவுகளும் : ஓர் ஆய்வு - (தென்மராட்சிப் பிரதேசத்தைச் சிறப்பாகக் கொண்டது)

(1), (2) Department of Economics, University of Jaffna, Jaffna, Sri Lanka.
(email: ssuthayan@yahoo.com)

**ஆய்வுச்சுருக்கம் :** மன்னராட்சி நிலவி செல்வம் கொழித்து விளங்கிய இலங்கைப் பொருளாதாரமானது, கிபி 1505 இலிருந்து 444 வருடங்கள் அன்னியரின் ஆதிக்கத்தின் கீழ் ஆளப்பட்டு வந்த நிலையில் 1948 பெப்ரவரி 4 ஆம் நாள் சுதந்திரம் கிடைத்த நிலையில் சுதேச ஆட்சியாளர்களின் கைகளுக்கு இலங்கையை ஆளும் அதிகாரம் கிடைத்தது. இருப்பினும் இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வந்த இனப்பிரச்சினையும் குறிப்பாக கடந்த மூன்று தசாப்தகால சிவில் யுத்தம் மற்றும் ஆயுதப் போராட்டம் என்பனவற்றின் தாக்கமானது, வடக்கு கிழக்கு மாகாணங்களின் உட்கட்டுமாணங்களைச் சிதைவடையச் செய்ததுடன் பொருளாதார வளங்களை அழித்தும் மக்களின் வாழ்வாதாரங்களைச் சீரழித்தும் சிறுவர் வறுமை என்ற நிலைமையைத் தூண்டியுள்ளன.இலங்கையில் வாழ்கின்ற இனங்குழுமங்களில் மூன்று இனக்குழுமங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. எனவே இவ்வறுமைக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் அவற்றிலிருந்து மீளவதற்கு அல்லது வறுமையைத் தணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆய்வாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**முக்கிய சொற்பதங்கள் :** சமூக ஆதரவு, சிறுவர் வறுமை, போசாக்கான உணவு, வாழ்வாதாரம்

## ஆய்வுச்சுருக்கம்:

மன்னராட்சி நிலவி செல்வம் கொழித்து விளங்கிய இலங்கைப் பொருளாதாரமானது, கிபி 1505 இலிருந்து 444 வருடங்கள் அன்னியரின் ஆதிக்கத்தின் கீழ் ஆளப்பட்டு வந்த நிலையில் 1948 பெப்ரவரி 4 ஆம் நாள் சுதந்திரம் கிடைத்த நிலையில் சுதேச ஆட்சியாளர்களின் கைகளுக்கு இலங்கையை ஆளும் அதிகாரம் கிடைத்தது. இருப்பினும் இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வந்த இனப்பிரச்சினையும் குறிப்பாக கடந்த மூன்று தசாப்தகால சிவில் யுத்தம் மற்றும் ஆயுதப் போராட்டம் என்பனவற்றின் தாக்கமானது, வடக்கு கிழக்கு மாகாணங்களின் உட்கட்டுமாணங்களைச் சிதைவடையச் செய்ததுடன் பொருளாதார வளங்களை அழித்தும் மக்களின் வாழ்வாதாரங்களைச் சீரழித்தும் சிறுவர் வறுமை என்ற நிலைமையைத் தூண்டியுள்ளன.இலங்கையில் வாழ்கின்ற இனங்குழுமங்களில் மூன்று இனக்குழுமங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. எனவே இவ்வறுமைக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் அவற்றிலிருந்து மீளவதற்கு அல்லது வறுமையைத் தணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆய்வாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**முக்கிய சொற்பதங்கள் : சமூக ஆதரவு, சிறுவர் வறுமை, போசாக்கான உணவு, வாழ்வாதாரம்**

***அறிமுகம்:***

இலங்கைப் பொருளாதாரத்தில் பெரும்பான்மை இனமாக 72% ஆன சிங்களவர்களும், 18% ஆன தமிழர்களும் (இலங்கைத் தமிழர் மற்றும் இந்தியத் தமிழர்களும்) 8% ஆன முஸ்லீம்களும் ஏனைய இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின் சிறுபான்மை இனமாகிய தமிழ் இனத்திற்கு எதிராகப் பெரும்பான்மையினர் கட்டவிழ்த்து விட்ட இனக்கலவரங்கள் ஒடுக்குமுறைகள் பாரபட்சங்கள் என்பன தமிழ் மக்களைத் தனித்தமிழ் ஈழக்கோரிக்கை என்ற நிலைப்பாட்டிற்குத் விரும்பியோ விரும்பாமலோ தள்ளிவிட்டது. அதன் விளைவாக உள்நாட்டுப் போர் அதனை அடைந்து கொள்வதற்கான ஒரு வழியாக ஆரம்பத்தில் அகிம்சைப் போராட்டத்தையும் பின்னர்

அதுதோல்வி அடைய ஆயதப் போராட்டத்தையும் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டதன் விளைவாக இலங்கையில் கடந்த 30 வருடங்களாகக் குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டுப் போர் வெடித்தது. இவ்வாறு வெடித்த உள்நாட்டுப் போரின் விளைவாக பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இன்றும் முகாம்களின் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய இழப்புகளுடன் இணைந்த வகையில் சிறுவர்களிடையே வறுமை என்பது அதிகரித்துள்ளமை மிகமோசமான விளைவாக உள்ளது. இதில் பெற்றோருடன் வாழும் வறுமையில் வாடும் சிறுவர்கள் ஒரு புறமும் மறுபுறம் பெற்றோரை இழந்த சிறுவர்கள் எண்ணிக்கை என்பதும் பாரியளவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு மேலாக யுத்த விளைவுகளால் திடீரென உருவான இளவயதுத் திருமணங்களால் பல குடும்பங்கள் ஒருவரை இழந்து அல்லது பிரிந்து வாழ்கின்ற வகையிலும் பல சிறுவர்கள் பெற்றோரை பிரிந்தும் வாழ்கின்றனர். இத்தகைய ஆதரவற்ற சிறுவர்கள் என்பது இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

நவீன உலகில் முக்கிய பிரச்சினையாக சிறுவர் வறுமை உருவெடுத்திருப்பது முக்கிய பிரச்சினையாக உள்ளது. சிறுவர் வறுமையானது வளர்ந்து வரும் நாடுகளிலும் குறைவிருத்தி நாடுகளிலும் பெரும் சமூக பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன. ஊலகளாவிய ரீதியில் நாளைய சமுதாயத்தின் அத்திவாரமாக சிறுவர்கள் திகழ்கின்றார்கள் யுத்த நிலைமைகள் காரணமாக இலங்கையில் பெரும்பாலான சிறுவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பதை எவருமே மறுப்பதற்கில்லை. இலங்கையில் கடந்த 30 வருட காலமாக நிலைகொண்ட யுத்தம் பல மனித உயிர்களைப் பலி கொண்டது. இதனால் எத்தனையோ சிறுவர்கள் தாய் தந்தையரை இழந்து தாம் வருமானம் உழைப்பதில் ஈடுபட்டுள்ளனர். யுத்தம் முடிந்தாலும் யுத்த வடுவாக சிறுவர் வறுமை காணப்படுகின்றது. யுத்தம் நடந்த பிரதேசங்களில் யுத்தம் விட்டுச்சென்ற எச்சமாக சிறுவர் வறுமையுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முக்கியமாகத் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சிறப்பாகக் கொண்டதாக உள்நாட்டுப் போர் விட்டுச் சென்ற சிறுவர் வறுமையும் அதன் சமூக பொருளாதார விளைவுகளும் : ஓர் ஆய்வு என்ற வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வறுமையானது பல்வேறு கோணங்களில் தேசிய, சர்வதேச ரீதியில் விரிவாக உணர்ந்து கொள்ளப்பட்டு விருகின்ற போதிலும் அது தொடர்பான இன்னும் பரந்த ஆழமான ஆய்வுகளும் அளவு கோல்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாற்றாக்குறையானது பல பரிமாணங்களை உடைய வறுமை வரைவிலக்கணத்தின் அடிப்படையில் செயற்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரச தனியார் அமைப்புகளுக்குப் பெரும் சவாலாகவே உள்ளது. எந்த ஒரு திட்ட ஆக்கத்திற்கும் அப்பிரதேசங்களில் அல்லது பிரிவுகளில் உள்ள சிறுவர்களின் தேவைகள் முதன்மையான இடத்தில் உள்ளன. அத்துடன் அப்பிரதேசங்களில் உள்ள சிறுவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்பன பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டம் இன்றியமையாதது. எனவே தான் தற்போதைய சூழலில் அவ்விடயங்களிற்கு அனுபவ அடிப்படையிலான ஆழமான ஆராய்ச்சிகள் தேவை என்பதற்காகவே இந்த ஆய்வு விசேடமாகத் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சிறப்பாகக் கொண்டதாக மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வானது தற்போதுள்ள ஆய்வுகளின் படி தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறுவர் வறுமை தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதாக அமைந்துள்ளது. மேலும், ஆரோக்கியம், போசணைக் குறைபாடு, கல்வி, முரண்பாடு, சிறுவர் தொழில், இடம்பெயர்ந்த தாய்மார்களைக் கொண்ட குடும்பங்களின் சிறுவர்கள், சிறுவர் துஸ்பிரயோகம், நிறுவனங்களின் ஆதரவு போன்ற விடயங்கள் பற்றி இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பிரதேச அறிமுகம்:

இலங்கையின் வடபகுதியில் யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றான தென்மராட்சிப் பிரதேசமானது வடக்கே கோப்பாய் வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பிரிவுகளின் பகுதியையும் தெற்கே நல்லூர், பூநகரிப் பிரிவுகளின் சில பகுதிகளையும் கிழக்கே பச்சிலைப்பள்ளிப் பிரிவின் பகுதிகளையும் மேற்கே யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் சில பகுதிகளையம் எல்லைகளாகக் கொண்டுள்ளதுடன் 60 கிராம சேவகர் பிரிவுகளையம் சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவககச்சேரி நகர சபை என்ற உள்ளூராட்சி அமைப்புகளையும் கொண்டு காணப்படுகின்றது.

## ஆய்வின் நோக்கங்கள்:

**பிரதான நோக்கம்**

- உள்நாட்டுப் போரினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறுவர் வறுமையும் குடும்ப பொருளாதார நிலைமைகளையும் வாழ்வாதார வளங்களையும் மதிப்பீடு செய்வதன் மூலம் வறுமையின் தீவிரத்தன்மையை அளவிடு செய்தல்:

**விசேட நோக்கங்கள்**

- ஆய்வுப்பிரதேசத்தில் சிறுவர் வறுமையின் நிலை எவ்வாறு உள்ளதென மதிப்பீடு செய்தல்
- ஆய்வுப்பிரதேச வாழ்வாதார வளங்களை மதிப்பீடு செய்தல்
- உள்நாட்டுப் போரின் தன்மையை அறிதல்

**ஆய்விற்கான கருதுகோள்:**

- தென்மராட்சிப் பிரதேசத்தின் சிறுவர் வறுமையைத் தூண்டியதில் உள்நாட்டு யுத்தம் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.
- பருநிலைப் பொருளாதார இலக்கை நிறைவு செய்வதற்கு சிறுவர் வறுமையை இனங்கண்டு பிரதேசரீதியான அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இதனூடாக தென்மராட்சிப் பிரதேசத்தின் பொருளாதாரத்தினை வலுவடையச் செய்ய முடியும்.

## ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியலில் மாதிரி படையெடுப்பு முறை என்ற வகையில் எளிய எழுமாற்று மாதிரி படையெடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்காக தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் சிறுவர் வறுமை அதிகளவில் உள்ள இடங்களில் சில பிரதேசங்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு அப்பிரதேசங்கள் ஒவ்வொன்றினதும் சிறுவர் வறுமை என எதிர்பார்க்கப்பட்ட 20 % ஆனவர்கள் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையில் தெரிவு செய்யப்பட்டு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகளை உதவியாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் இந்த ஆய்விற்குத் தேவையான தரவுகள் என்ற வகையில் முதன்மைத்தரவுகள் மற்றும் துணைத்தரவுகள் என்பன திரட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நேர்காணல்கள் மூலமாகவும் உரையாடல்கள் மூலமும் அவதானிப்புக்கள் ஊடாகவும் பல தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு DEV கட்டமைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது. DEV கட்டமைப்பில் இல்லாமை, நீக்கம், பலவீனமான தன்மை, போன்றன உள்ளடங்கியுள்ளது. இதனைவிட தரவுப்பகுப்பாய்விற்கு கணிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் DEV கட்டமைப்பு அடிப்படையில் நோக்கும் போது:

**இல்லாமை:** இது அடிப்படைத் தேவையுடனான பரிமாணம் ஆகும். சிறுவர்களின் நல்ல ஒரு வாழ்க்கைக்குத் தேவையான உணவு, சுத்தமான நீர், கல்வி ஆரோக்கியம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமையாகும். இந்த விடயம் ஆய்வுப்பிரதேசத்தில் சிறுவர்கள் மத்தியில் இல்லாமை தன்மை சராசரியாக 50% காணப்படுகின்றது.

**நீக்கம்:** இது அடிப்படைத் தேவைகளுடன் சிறுவர்களின் உணவு, சமூக ஆதரவு என்பவற்றைக் கருத்தில் கொள்கின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் சமூக ஆதரவாக 2 நிறுவனங்களே காணப்படுகின்றது. அதன் செயற்பாடுகள் கூடப் போதியளவில் கிடைக்கவில்லை. அத்துடன் ஒரு நேர உணவை மட்டும் உட்கொள்கின்ற 30 % சிறுவர்களும் இரண்டு நேர உணவை மட்டும் உட்கொள்கின்ற 38% சிறுவர்களும், மூன்று நேர உணவை உட்கொள்ளும் 32% சிறுவர்களில் தேவையான கலோரி மற்றும் புரத அளவுகளை உட்கொள்ளாத 48 % சிறுவர்களும் காணப்படுகின்றார்கள்.

**பலவீனமான தன்மை:** சிறுவர்கள் தமது வாழ்விடம், இனம், சமூக நிலைமை, வயது, பால், போன்ற பல்வேறு விடயங்களின் அடிப்படையில் ஆய்வு செய்தல். ஆய்வுப் பிரதேசத்தில் பலவீனமான தன்மையான காரணிகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் வறுமையை அளவிடல். ஆய்வுப்பரதேசத்தில் இன ரீதியாக சமூக ரீதியாக பால் ரீதியாக மட்டுமன்றி வாழ்விட ரீதியாகவும் முறையே 98%, 75%, 60%, 46% ஆன சிறுவர்கள் பலவீனமான தன்மையை அனுபவிக்கின்றார்கள்

அட்டவணை - 1:
ஆய்வுப்பரதேசத்தில் DEV கட்டமைப்பு

| வயது | 1-5 | 6-10 | 11-16 | மொத்தம் |
|---|---|---|---|---|
| இல்லாமை | 56% | 24% | 20% | 100% |
| நீக்கம் | 48% | 28% | 24% | 100% |
| பலவீனமான தன்மை | 53% | 25% | 22% | 100% |

## கடந்த கால இலக்கிய மீளாய்வு :

வறுமை பற்றிய ஆய்வானது பல்வேறு வகையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் வறுமை ஏன ஏற்பட்டுள்ளது? அவை எவ்வாறு நிலைக்கின்றன? என்பது பற்றிக் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஊட்டச்சத்து பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

Ruggles, (1990) என்பவரால் பொதுக் கொள்கையில் மாற்றீடான வறுமை அளவீடுகளும் அவற்றின் நடைமுறைகளும் வரையறை செய்தல் பற்றிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Save the Children வறுமை பற்றி ஆய்வு செய்த போது வறுமை என்பது சிறைவாழ்வு, வறுமை என்பது சுதந்திரமின்மை போன்ற முடிவுகளைத் தந்துள்ளது.

இவ்வாறாக வறுமை பற்றிய பொது ஆய்வுகள் காணப்படுகின்றது. ஆனால் இலங்கையினைப் பொறுத்தவரையில் உள்நாட்டுப் போர் வறுமையைத் தூண்டியுள்ளது. இதில் வடமாகாணம் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவும் முக்கிய இடம் பெறுவதாலும் இப்பிரதேச சிறுவர் வறுமை பற்றி இதுவரையில் யாராலும் ஆய்வு மேற்கொள்ளப்படாத காரணத்தாலும் இந்த ஆய்வினை ஆய்வாளரால் முன்னெடுக்கப்பட்டது.

எந்த ஒரு திட்ட ஆக்கத்திற்கும் எப்பிரதேசங்களிலோ அல்லது பிரிவுகளிலோ உள்ள சிறுவர்களின் தேவைகள் முதன்மையான இடத்தில் உள்ளன மற்றும் பல்வேறு பிரதேசங்களில் உள்ள சிறுவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் என்பன பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டமும் இன்றியமையாததாகும். எனவே தற்போதைய சூழலில் இவ்விடங்களிற்கு அனுபவ அடிப்படையிலான ஆழமான ஆராய்சிகள் கட்டாயம் தேவையாகும். எனவே தென்மராட்சி பிரதேசத்தில் சிறுவர் வறுமை பற்றிய தெளிவான நுட்பமான ஆய்வுகள் எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படாமையால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## முடிவுரை

ஆய்வுப்பிரதேச சிறுவர் நிலைமையினை நோக்கின் ஆய்வுப்பிரதேசத்தில் 3159 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களும் அதே நேரம் 672 ஒரு பெற்றோரில் யாரோ ஒருவரை இழந்த சிறுவர்களும் 38 இரு பெற்றோரையும் இழந்த சிறுவர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். அத்துடன் பிறப்பலிருந்தே 17 பேரும் அங்கவீனர்களாக உள்ளனர். 27 சிறுவர்கள் காணமல் போயுள்ளனர். 22 மாணவர்கள் இடைவிலகல் நிலைக்குட்பட்டுள்ளார்கள். பாலியல் ரீதியக 3 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 24 சிறுவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிறுவர் Home இல் குறிப்பாக The Selvation Amry Childrens Home இல் 7-12 வயதுக்கிடையில் ஒருவரும் 13-18 வயதிற்குள் 19 பேரும் தங்கியுள்ளார்கள். அதேபோல மிருசுவிலில் உள்ள Roman Catholic Home இல் 0-6 வயதிற்குள் ஒருவரும் 7-12 வயதிற்குள் 19 பேரும் 13-18 வயதிற்குள் 20 பேரும் தங்கியுள்ளனர்.

இவ்வகையில் சிறுவர் வறுமை என்பது பரந்த நோக்கில் சிறுவர்களின் ஆற்றல், நல்வாழ்வு, எதிர்கால வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு விடயங்களைக் குறிக்கின்றது. கடந்த சில தசாப்த காலமாக ஏற்பட்ட யுத்தமானது யாழ்மாவட்டத்தை வெகுவாகப்பாதித்தது மட்டுமல்ல தென்மராட்சிப் பிரதேசத்தை மிகவும் மோசமாகப் பாதித்தது. இன்று வரை மீள்கட்டுமாண வசதிகள் மிகக்குறைந்த நிலையில் காணப்படுகின்றது. தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தின் விளைவாக வறுமை ஒரு வைரஸ் நோய் போன்று பரந்து பரவிக் காணப்படுகின்றது. அதிலும் சிறுவர்களிடையே வறுமையானது தீராத ஒரு நோயாகக் காணப்படுகின்றது. இத்தகைய ஆதரவற்ற சிறுவர்கள் என்பது இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இன்றைய சிறுவர் நாளைய உழைப்பாளிகள் என்ற வகையில் இச்சிறுவர்களின் வறுமை தணிக்கப்பட்டு அவர்களும் பொருளாதார செயற்பாடுகளில் பங்கெடுத்து நல்ல ஒரு எதிர்கால சந்ததியை உருவாக்க அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் தனியாரும் இணைந்து தூரநோக்கு சிந்தனையுடன் அரசியல் இலாபமோ சுயநல அரசிலோ இன்றி

வெளிப்படையாக பொறுப்புக் கூறக்குடிய வகையில் உள்நாட்டுப் போர் விட்டுச் சென்ற சிறுவர் வறுமையை நீக்குவதுடன் சமூக கொருளாதார அபிவிருத்தியில் அவர்களையும் பங்காளிகாக்கி அபிவிருத்தி என்ற நீரோட்டத்தில் இச்சிறுவர்களையும் இணைக்கச் செய்ய வேண்டும்.

## உசாத்துணைகள்:

Center For Poverty Analysis (CEPA) (2008), Child Poverty in Sri Lanka. Briefing Paper Series, Christian Children's Fund Sri Lanka. Poverty Brief 11 -2008

Dileni Gunewardena, Arunika Meedeniya and Shivaprasam Shivakumaran, (2007), Absolute and Relative Consumption Poverty in Sri Lanka: Center For Poverty Analysis (CEPA) Consumer Finance Survey 2003/04. Working Paper Series No. 16 -2007.

Dileni Gunewardena, (2005), Improving Poverty Measurement in Sri Lanka: Center For Poverty Analysis (CEPA) Working Paper Series No. 09 -2005.